**ஹோமியோபதி வைத்திய சபை - 2019**

---

## 1.1 அபிப்பிராயம்

ஹோமியோபதி வைத்திய சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புகள் மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வைத்திய சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும், அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வைத்திய சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காயிவின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மருத்துவ சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்டுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால

நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வைத்திய சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வைத்திய சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 இன் 10ஆம் இலக்க ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 28(6) உப பிரிவு | ஹோமியோபதி மருத்துவ துறையில் உள்ளவர்களை பதிவுசெய்வதற்காக மருத்துவ சபையினால் நடாத்திச்செல்லப்படும் பதிவேடு, பதிவினை புதுப்பிக்கும் கட்டணங்கள் செலுத்திய மருத்துவர்கள் மற்றும் செலுத்தாத மருத்துவர்கள் ஆகியோரை தனித்தனியாக இனங்காண்பதற்கு இயலுமான வகையில் மற்றும் நிலுவை கட்டணத்தை இனங்காணக்கூடிய வகையில் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | மருத்துவர்களின் பதிவினை நாளதுவரையாக்குவதற்காக செலுத்திய கட்டணங்களை உள்ளடக்கிய பதிவேடொன்றை பேணுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதாக. | ஹோமியோபதி மருத்துவ துறையில் உள்ளவர்களை பதிவுசெய்வதற்காக பதிவேடொன்றை உரிய முறையில் நாளதுவரையாக பேணிச்செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் | | | |

நிதிப்பிரமாணக் கோவை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 754 | ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் இருப்பு பதிசேட்டினை சமப்படுத்த வேண்டிய போதிலும், 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக பொதுவான பொருட் பதிவேடு மற்றும் இறுவைச் சிகிச்சை பதிவேடு சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 756 | நிறுவனத்தின் பொருட்கள் தொடர்பான மதிப்பாய்வொன்று மேற்கொள்வதற்காக மதிப்பாய்வுச் சபையொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 மற்றும் 2019ஆம் ஆண்டுகளுக்கான மதிப்பாய்வுச் சபை நியமிக்கப்பட்டு மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |
| (இ) | தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 16.1ஆம் பிரிவு | 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளின் போது ஆட்சேர்க்கப்பட்டிருந்த 7 மருந்து கலப்பவர்கள், 7 மருத்துவ உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை 2020 ஆகஸ்ட் 31ஆந் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக இந்த உத்தியோகத்தர்களை சேவையில் நிரந்நதமாக்க முடியாதிருந்தது. அத்துடன், அவர்களின் தகுதிகாண் காலத்தினையும் நீடிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மருத்துவ சபையின் பதவியணிக்காக வினைத்திறன் காண் தடைப்பரீட்சை நடாத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. | பரீட்சைகள் துரிதமாக நடாத்தப்பட வேண்டியதுடன், அதுவரையிலும் உத்தியோகத்தர்களின் தகுதிகாண் காலத்தினையும் நீடிப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2014 ஆகஸ்ட் 13ஆந் திகதிய பீஈடீ 25(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், அரச வங்கியொன்றில் பேணிச்செல்லப்படும் கணக்கொன்றில் பணத்தினை வைப்புச்செய்ய வேண்டிய போதிலும், 2009ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்த பாடநெறிக் கட்டணங்கள் தனியார் வங்கியொன்றின் சேமிப்புக் கணக்கொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக அந்த கணக்கில் உள்ள மீதியானது ரூபா 1,874,489 ஆகும். | இந்த கணக்கிலிருந்து பணத்தினை அகற்றி ஹோமியோபதி நிதியத்தினை பேணிச் செல்லும் இலங்கை வங்கிக் கணக்கில் ஒதுக்கப்பட்டுள்ள பணமாக வைப்புச் செய்வதற்கு புதிய மருத்துவ சபை அமைச்சுடன் சேர்ந்து நடவடிக்கை எடுத்தவாறு உள்ளது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு பெறுபேறு ரூபா 141,689 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 311,573 ஆகும். அதன் பிரகாரம் நிதி விஜளைவுகளில் ரூபா 169,884 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டதுடன், அந்த அதிகரிப்பு நாட்டின் மீண்டெழும் செலவினங்களிலான அதிகரிப்பு மற்றும் ஏனைய செலவினங்கள் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹொமியோபதி மருத்துவ துறையில் ஈடுபடுவதை மேம்படுத்தல், அபிவிருத்தி செய்தல மற்றும் கண்காணித்தல், ஹோமியோபதி மருத்துவ முறைமைகள் தொடர்பில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், மேம்படுத்தல், மருந்துப் பொருட்கள் மற்றும் ஏனைய மருந்துப்பொருட்களை உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளிப்பதை மேற்பார்வை செய்தல்மற்றும் கட்டுப்படுத்தல் ஆகிய பிரதான நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வைத்திய சபையின் அனைத்து திட்டங்களும் வைத்திய சபையின் முன்மொழிவின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்படுகின் றமையால், வைத்திய சபையினை நியமிக்கப்பட்டிராமை வருடாந்த திட்டத்தினை தயாரிக்காமைக்கான காரணமாக அநைந்திருந்தமை மற்றும் 2020 செப்தம்பர் 09ஆந் திகதி நியமிக்கப்பட்ட புதிய வைத்திய சபையினால் எதிர்வரும் வருடங்களுக்காக திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றமை. | ஹோமியோபதி வைத்திய சபை அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு இயலுமான வகையில் செயல்நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டியமை. |
| (ஆ) | ஹோமியோபதி அதிகாரச்சட்டத்தின் 30(1) ஆம் பிரிவின் பிரகாரம், ஹோமியோபதி வைத்திய துறையில் ஈடுபட்டுள்ளோரை பதிவு செய்வதற்காக பரீட்சையொன்றை நடாத்துவதற்கு, 2018ஆம் ஆண்டின் போது விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்ததுடன், 189 விண்ணப்பங்கள் | 2016இன் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்திற்குரிய சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை உருவாக்குவதற்காக அமைச்சு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளதாக மற்றும் அந்த பணிகள் நிறைவடைந்தவுடன் ஹோமியோபதி | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களை உருவாக்குவதற்கு உரிய பணிகள் மற்றும் பரீட்சைகளை நடாத்துவதற்குரிய பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கிடைத்திருந்தன. அவ்வாறான போதிலும், பரீட்சைகளை நடாத்துவதற்காக சட்டங்கள் மற்றும் விதிகள் உருவாக்கப்பட்டிராமை மற்றும் சபையின் பணிகள் தொடர்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்பட்டவாறு உள்ளமை காரணமாக 2020 ஆகஸ்ட் 31ஆந் திகதி வரையிலும் பரீட்சைகளை நடாத்துவதற்கு மற்றும் மருத்துவ துறையில் ஈடுபட்டுள்ளோரை பதிவுசெய்ய முடியாதிருந்தது. | அதிகாரச்சட்டத்தின் 30(1) பிரிவின் பிராகரம் பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நடாத்திச்செல்லப்படும் 7 பிணியாய்வுகளுக்காக மீளாய்வாண்டினுள் நாளாந்தம் பங்குபற்றிய நோயாளர்களின் சராசரி 8 முதல் 29இற்கு இடைப்பட்டதாக காணப்பட்டதுடன், நாளாந்தம் நோயாளிகளின் பங்குபற்றலை அதிகரித்தல் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019ஆம் ஆண்டின் போது ஹோமியோபதி வைத்திய சபை கூடாத வருடமொன்று என்பதால் வைத்திய சபையின் தீர்மானத்தின் பிரகாரம், நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய எந்தவொரு நிகழ்ச்சித்திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை என்பதுடன், 2020 செப்தம்பர் 09ஆந் திகதி நியமிக்கப்பட்ட புதிய வைத்திய சபையினால் எதிர்வரும் வருடங்களில் நோயாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக திட்டங்களை தயாரிப்பதாக. | நோயாளர்களின் பங்குபற்றலை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியொன்றை ஆரம்பிப்பதற்காக 2008ஆம் ஆண்டின் போது கட்டிடமொன்றினை நிர்மாணித்து, 2009ஆம் ஆண்டின் போது அதற்காக தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் கற்கைப் பணிகளை ஆரம்பிப்பதற்குரிய சட்டரீதியான சட்டகத்தினை தயாரிப்பதற்காக உரிய நடைமுறைகள் முன்னெடுக்கப்படாத காரணத்தால், 2020 ஆகஸ்ட் 31ஆந் திகதி வரையிலும் கற்கைப் பணிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தது. அதன் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,199,254 கிரயமான நிலையான சொத்துக்கள் மற்றும் அதற்குரிய கட்டிடமொன்று 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | வைத்திய சபை செயற்படாத காரணத்தால் அதற்கான தீர்வொன்று கிடைக்கவில்லை என்பது. | நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் கொள்வனவு செய்யப்பட்டுள்ள உபகரணங்களை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக வைத்திய சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 48ஆன போதிலும், உள்ளபடியான பதவியணி 36 ஆகும். சபைக்கு அத்தியாவசியமான பதவியொன்றான இரு மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் 07 மருந்து கலப்பவர்களின் வெற்றிடத்தினை நிரப்புவதற்கு 2020 ஆகஸ்ட் 31ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ உதவியாளர் பதவியில் உள்ள வெற்றிடங்கள் மற்றும் இரு மருத்துவர்களின் வெற்றிடங்களை துரிதமாக நிரப்புவதற்கு புதிய வைத்திய சபை நடவடிக்கை எடுத்தவாறு இருந்ததாக மற்றும் மருந்து கலப்பவரின் வெற்றிடத்தினை நிரப்புவதற்காக ஏஜே தரத்தினை பெறுவதற்கு உரி பாடநெறியை அங்கீகரிப்பதற்கு உரி பணிகள் நிறைவடைந்த பின்னர் அந்த பணியை நிறைவுசெய்ய எதிர்பார்ப்பதாக. | இந்த வெற்றிடத்தினை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |